*7*

# இயேசுவுக்குள் சீஷரின் வாழ்வு

## (யோவான் 15)

*"நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர். என்னில் கனி கொடாதிருக்கிற கொடிஎதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள். என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில், நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாதது போல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்" (வசனங்கள் 1-6).*

இயேசு தமது பிரிவிற்குத் தமது அப்போஸ்தலர்களைத் தயார்படுத்துகையில், தாம் (சரீரப் பிரகாரமாக அவர்களுடன்) இல்லாத நிலையில் அவர்களை ஆவிக்குரிய வாழ்வு எவ்வாறு நிலைநிறுத்த முடியும் என்பதைப் பற்றி அவர்களுக்குக் கூறினார். மிகமுக்கியமான இந்த சத்தியத்தை அவர், திராட்சச் செடி மற்றும் அதன் கிளைகள் பற்றிய ஒரு ஒப்புவமையைப் பயன்படுத்தி அவர்களுக்கு முன்நிறுத்தினார். அவர் தமது பிதாவைத் திராட்சத் தோட்டக்காரர் அல்லது விவசாயி என்ற வகையிலும், தம்மை திராட்சச் செடி என்ற வகையிலும், ஒவ்வொரு சீஷரையும் திராட்சச் செடியுடன் இணைந்த கிளைகள் என்ற வகையிலும் சித்தரித்தார். மற்ற எல்லா உறவுகளுக்கும் மேலாக நிற்கும், ஜீவனைக் கொடுக்கும் ஒரு உறவு என்பதே இந்த ஒப்புவமையின் மையக்கருத்தாக உள்ளது. இது பிதா, குமாரன் மற்றும் சீஷன் ஆகியோரை உள்ளடக்குகிற ஒரு முக்கோண உறவுமுறையாக உள்ளது.

இயேசுவின் வார்த்தைகள், அப்போஸ்தலர்களுக்குப் புரிந்துகொள்ள வலிவார்ந்தவையாக இருந்தது போன்றே, அவைகள் நமக்கும் புரிந்துகொள்ள வலிவார்ந்தவையாக உள்ளன. இயேசு, தாம் பிதாவின் வலது பக்கம் வீற்றிருக்கும்படி எடுக்கப்பட்ட பின்பு, தம்மைப் பின்பற்றுபவர்கள் இந்த உலகத்தில் எவ்வாறு ஆவிக்குரிய வாழ்வைக் கொண்டிருக்க முடியும் என்பதைப் பற்றி விவரித்துக் கொண்டிருந்தார். அப்போஸ்தலர்கள் இனியும் இயேசுவின் சொந்தப் பிரசன்னத்தைக் கொண்டிருக்க மாட்டார்கள், ஆனால் அவர்கள், வாழ்வை நிலைநிறுத்தும் வகையில் அவருடன் இணைக்கப் பட்டிருக்க

வேண்டியிருந்தது. இன்றைய நாட்களில் நாம் கிறிஸ்துவுக்காக வாழுகையில், திராட்சக் கிளையானது திராட்சச் செடியின் மூலமாக வாழ்வது போன்று, நாம் அவருக்குள், அவர் வழியாக வாழவேண்டும்.

## இன்றியமையாத ஒரு உறவு

உண்மையில், இயேசுவுடன் ஒரு சீஷன் கொண்டிருக்கும் இந்த உறவு, முற்றிலும் இன்றியமையாத ஒரு உறவாக இருக்கிறது. இயேசு தம்மைத் திராட்சச் செடியாக அடையாளப்படுத்தினார் மற்றும் கிளையானது திராட்சச் செடியில் இருந்து (தனக்குத் தேவையானதைப்) பெற்றுக்கொள்வது போன்று அவரிடம் இருந்து ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்காக நாம் அவருடன் இணைக்கப்பட்டிராத வரையிலும், நாம் ஆவிக்குரிய வாழ்வு எதையும் கொண்டிருக்க இயலாது என்று அறிவித்தார். அவர், "நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர்" என்று கூறினார் (15:1). பிற்பாடு அவர், "ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்" என்று கூறினார் (15:6).

இந்த ஒப்புவமையின்படி பேசுவதென்றால், ஒரு கிளையானது திராட்சச் செடியுடன் இணைகையில் - அதாவது ஒருவர் கிறிஸ்தவராகுகையில் - கிறிஸ்தவ வாழ்வு தொடங்குகிறது. திராட்சச் செடியின் பாகமாகுதல் போன்ற வழியில், இரட்சிப்பைப் பெறுதல் என்பதில் விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவை அடங்குகின்றன. பவுல், சற்று மாறுபட்ட ஒரு உருவகத்தைப் பயன்படுத்தி, "ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" என்று கூறினார் (கலாத்தியர் 3:27). ஞானஸ்நானத்தில் நாம் கிறிஸ்துவுக்குள் பிரவேசித்து அவரைக் கொண்டு போர்த்தப்படுகிறோம் அல்லது உடுத்துவிக்கப்படுகிறோம் என்று அவர் கூறினார். திராட்சச் செடியில் உள்ள கிளைகளைப் போன்று, நாம் கிறிஸ்துவுக்குள் தங்கி இருந்தால் மாத்திரமே, வளருகிற, மலருகிற மற்றும் கனிகளைத் தருகிற ஒரு புதிய ஜீவனைக் கிறிஸ்துவுடன் கொண்டிருக்கிறோம். நாம் கிறிஸ்துவுடனான ஒருமைப்பாட்டிற்குள் பிரவேசித்து அந்த ஒருமைப்பாட்டில் தங்கி இருக்கிறோம். எந்தக் கிளையும் திராட்சச் செடியை விட்டுப் பிரிந்து வாழ இயலாது, எவரொருவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்த நிலையில் கிறிஸ்தவ வாழ்வைக் கொண்டிருக்க இயலாது.

## தொடருகிற ஒரு உறவு

இயேசுவுடனான நமது உறவு தொடருகிற உறவாக உள்ளது. இயேசு, "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று கூறினார் (15:5). அவர் பயன்படுத்திய "நிலைத்திருத்தல்" என்ற வார்த்தை, தொடருதலை விளக்கப்படுத்துகிறது. நாம் அவருடன் கொண்டுள்ள இந்த உறவு நிரந்தரமானதாக, அன்றாடம் உள்ளதாக மற்றும் வளருகிறதாக உள்ளது.

உணவு உண்ணாத ஒருவருக்கு, இரத்தக்குழாய் மூலமாக உணவளித்து அவருக்கு மருத்துவர் வலிவூட்டாதிருந்தால், இறந்து போவார். எந்த ஒரு நபரும் உணவின்றி வாழ இயலாது, மற்றும் எந்தக் கிறிஸ்தவரும் கிறிஸ்துவின் தெய்வீக ஆற்றல் இன்றி வாழ இயலாது. இயேசுவுடனான நமது உறவு, நாம் இயேசுவுடன் நடத்தல், இயேசுவின் மூலமாக ஜெபித்தல் இயேசுவின் வார்த்தைகளால் போஷிக்கப்படுதல் மற்றும் அவரைப் போன்ற இந்த தன்மையில் வளருதல் ஆகியவற்றைக் கொண்டு பராமரிக்கப்படுகிறது.

## ஆக்க வளம் கொண்ட ஒரு உறவு

*கிறிஸ்துவுக்குள் வாழ்வைக் கொண்டிருத்தல் என்பது, அவருடனான நமது உறவு ஆக்க வளம் உடையதாக இருக்கும் என்று அர்த்தப்படுகிறது.* இயேசு, "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்கமாட்டீர்கள்" என்று கூறினார் (15:4). இந்தத் தெய்வீக ஆற்றல் நமக்குள் பாய்ந்தோடுகையில், அதைக் கொண்டு நாம் சிலவற்றைச் செய்ய வேண்டும். ஒன்று நாம் அதற்குப் பதில் செயல் செய்து, கிறிஸ்துவின் ஜீவன் எப்போதும் உண்டாக்குகிற - ஆவிக்குரிய வாழ்வு, அவரைப் போன்று வளருதல், அவருடையது போன்ற அன்பு மற்றும் அவர் ஊழியம் செய்தது போன்று ஊழியம் செய்யத் தளராத ஊக்கம் கொண்டிருத்தல் போன்ற - விஷயங்களை நமக்குள் உண்டாக்க அனுமதிக்க வேண்டும், அல்லது நாம் ஆவிக்குரிய வகையில் மரிக்கிறோம். கிரஹாம் ஸ்க்ரோஜி அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> இரு விஷயங்கள் யூகிக்கப்படுகின்றன; முதலாவது, வாழ்வில்லாத இடத்தில் கனிதரும் தன்மை இருக்க இயலாது; மற்றும் இரண்டாவது, வாழ்வு உள்ள இடத்தில் எப்போதுமே கனிதரும் தன்மையின் சில அளவு இருக்கிறது.[1]

இயேசு, "என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்" என்றும் கூறினார் (15:2). நாம் திராட்சச் செடியுடன் இணைக்கப்பட்டிருந்தும், அந்தச் செடியில் இருந்து வருகிற தெய்வீக வாழ்வை ஏற்ற வகையில் பயன்படுத்தாமல் இருக்கச் சாத்தியக்கூறு உண்டு. ஆவியானவர் வசனத்தின் மூலமாக நம்மை வழிநடத்துகையில் நாம் ஆவியானவரை அவித்துப் போடுவது போன்ற அதே வழியில் இதை (இந்த உறவை) நாம் அணைத்துவிடக் கூடும்.

கிறிஸ்துவின் தெய்வீக ஆற்றை நாம் ஏற்றுக்கொண்டு, அது நமக்குள் செயல்பட அனுமதிக்கும்போது, நம்மை அவரது சாயலாக அதிகம் ஆக்கிக்கொள்ளும்போது, நாம் அதிகம் விரைவாக வளரக்கூடும்படி நாம் பிதாவானவரின் ஊக்குவித்தலைப் பெறுகிறோம். சிலவேளைகளில் அவர், நமக்குள் குமாரனின் வாழ்வு முழுமையாகவும் அதிகம் ஊடுருவிப் பரவுவதாகவும் இருக்கும் வகையில், நம்மைச் சுத்தம் பண்ணுகிறார். அப்போஸ்தலர்கள் சமீபத்தில்தான் இயேசுவின் வசனங்களினால் சுத்தம்பண்ணப் பட்டிருந்தனர். அவர்களிடத்தில் அவர், "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்" என்று கூறினார் (15:3). அதுபோன்றே

நமது பிதாவானவர், நமது இருதயங்களில் வசனம் ஒரு புதிய வல்லமையுடன் பிரவேசிக்கையில் மற்றும் மிக அதிக செயல்வலிவான வெட்டு முனையில் அது நம்மீது செயல்படுகையில், அவர் அடிக்கடி நம்மைச் சுத்தம் பண்ணுகிறார்.

## முடிவுரை

அப்படியென்றால், இயேசு நமது நம்பிக்கையாக, நமது உதாரணமாக, நமது தலைமை மாலுமியாக, நமது மீட்பராக மற்றும் நமது ஆண்டவராக இருப்பது மாத்திரமல்ல, ஆனால் அவர் நமது ஜீவனாகவும்/வாழ்வாகவும் இருக்கிறார். அவரின்றி நாம் எதையும் கொண்டிருப்பதில்லை, அவரின்றி நம்மால் எதையும் செய்ய இயலாது மற்றும் அவரின்றி நாம் ஒன்றுமற்று இருக்கிறோம். அவருடனான நமது வாழ்வு, இந்த உலகத்தில் நாம் கொண்டிருக்கக் கூடிய மிகமேன்மையான உறவாக உள்ளது - இது இன்றியமையாத மற்றும் தொடரும் உறவாக உள்ளது, இது நம்மை ஆக்க வளமுள்ளவர்களாகச் செய்து தேவனுக்கு மகிமையைக் கொண்டுவருகிறது.

---

*"எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபேசியர் 1:22, 23).*

*"ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" (கொலோசெயர் 2:9, 10).*

---

குறிப்பு

[1]W. Graham Scroggie, *The Gospel of John,* Study Hour Commentaries (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1976), 101.